# இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடங்கள்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் கீழ்வரும் பதவிகளுக்கு பொருத்தமான தகைமையுள்ள நபர்களிடமிருந்து 06.11.2020 வரை விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும்.

- **<u>கருத்திட்ட அலுவலகம்</u>**
  - கருத்திட்ட முகாமையாளர் - நிருமாண வேலைகள்

- **ஊழியர் மற்றும் மாணவர் நலன்புரிப் பிரிவு**
  - வைத்திய அதிகாரி
  - பன்னை முகாமையாளர், தரம் III
  - மார்ஷல், தரம் II
  - உப விடுதி காப்பாளர், தரம் II (முழு நேரம்)
  - மருந்தாளர் (குறைந்த தரம்)
  - பொதுச் சுகாதாரப் பரிசோதகர், தரம் III

**<u>சம்பள அளவுத்திட்டம்</u>**

| | |
|---|---|
| கருத்திட்ட முகாமையாளர் | U-EX 2(II) - Rs. 66,180 - 8x1,335; 8x1,630 – 89,900 p.m. |
| வைத்திய அதிகாரி | U-MO 1(II) - Rs. 55,350 – 10x1335; 1x1,630 – 70,330 p.m. |
| பன்னை முகாமையாளர், தரம் III | U-EX 1(II) - Rs. 50,625 - 3x1,125 – 54,000(EB) 55,335; 12x1,335 – 71,355 p.m. |
| மார்ஷல், தரம் II | U-MN 3 (II) - Rs. 42885 - 18x660 – 54,765 p.m. |
| உப விடுதி காப்பாளர் தரம் II (முழு நேரம்) | U-MN 3 (II) - Rs. 42885 - 18x660 – 54,765 p.m. |
| மருந்தாளர் (குறைந்த தரம்) | U-MT 1(IIIA) - Rs. 31,625 – 7x300; 10x355 – 37,275 p.m. |
| பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தரம் III | U-MT 1(IIIA) - Rs. 31,625 – 7x300; 10x355 – 37,275 p.m. |

[மேற்படி சம்பளத் திட்டத்திற்கு மேலதிகமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்]

**<u>அனுகூலங்கள்</u>**

- தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளத்தின் 10% பல்கலைக்கழக ஊழியர் சேம இலாப நிதியத்திற்கு செலுத்துதல் வேண்டும் அதே வேளை தொழில் வழங்குனர் உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளத்தின் 15% வீதத்தினை அவர்களின் கணக்கில் வைப்பிலிடுவர் அதில் 8% பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்திற்கும் 7% பல்கலைக்ககழக ஊழியர் சேம இலாப நிதியத்திற்கும் செல்லுத்தப்படும். இதற்கு மேலதிகமாக ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பல்கலைக்கழகம் அவரது மாதாந்த சம்பளத்தின் 3% தொகையினை பங்களிப்புச்செய்யும்.

- சிரேஸ்ட நிருவாக உத்தியோகத்தர்கள் 07 வருட சேவை முடிவின் பேரில் முழுச் சம்பளத்துடனான 01 வருடம் ஓய்வு விடுமுறை அல்லது சம்பளமற்ற 02 வருட ஓய்வு விடுமுறைக்கு உரித்துடையவராவார். இந்த ஓய்வு விடுமுறையில் வெளிநாடு செல்லும் உத்தியோகத்தர் அவரது துணைவியாருடன் செல்வதற்கான முழு விமானச் சீட்டினை பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்பங்களும் ஏனைய விபரங்களும்**

விண்ணப்பப்படிவம், தேவையான தகைமைகள் மற்றும் அது தொடர்பான தகவல்களை பல்கலைக்கழகத்தின் **www.seu.ac.lk** என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பிக்க விரும்புவோர் பல்கலைக்கழக இணையத்தளத்திலிருந்து தரவிறக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து ரூபா. 200.00 செலுத்திய பற்றுச் சீட்டினை இணைத்து அனுப்புதல் வேண்டும். இக் கட்டணத்தினை மக்கள் வங்கியின் அட்டாளைச்சேனை கிளையிலுள்ள **228-1001-9000-1704** எனும் இலக்கம் கொண்ட இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கணக்கிற்கு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்படிவங்கள் சான்றிதகளின் பிரதிகளுடன் பதிவுத்தபாலில் **பதிவாளர், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், பல்கலைக்கழக பூங்கா ஒலுவில் - 32360** எனும் முகவரிக்கு 06.11.2020ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் கடித உறையின் இடதுபக்க மூலையில் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தங்களது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவரூடாக அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படாத விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

பூரணமற்ற, தெளிவில்லாத மற்றும் விண்ணப்ப முடிவு திகதிக்கு பிறகு பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளை நேர்முகப்பரீட்சைக்கு பட்டியல் படுத்தும் உரிமையை இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தன்வசம் வைத்துள்ளது. நேர்முகப் பரீட்சைக்கு பட்டியல் படுத்தப்படும் விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

பதிவாளர்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
பல்கலைக்கழக பூங்கா
ஒலுவில் - 32360
07.10.2020

1. **<u>கருத்திட்ட முகாமையாளர் - நிருமாண வேலைகள்:-</u>**
<u>கல்வித் தகைமைகள்</u>:-

அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் / உயர் கல்வி நிறுவனத்தில் பெறப்பட்ட குடிமுறை பொறியியல் சிறப்புப் பட்டத்துடனான பொறியியலின் விஞ்ஞான இளமானிப்பட்டம்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் / உயர் கல்வி நிறுவனத்தில் அளவறி மதிப்பீட்டில் சிறப்பு பட்டத்துடனான பொறியியலில் விஞ்ஞான இளமானிப்பட்டம்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட இலங்கை பொறியியல் நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட மேலுள்ளவற்றுக்கு சமனான தொழில்சார் தகைமைகள்.

அத்துடன

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் நிறுவனத்தில் இணைக்கப்பட்ட அங்கத்துவத்தைக் கொண்டிருத்தல்

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட அளவுக் கணக்கெடுப்பு நிறுவனத்தில் இணைக்கப்பட்ட அங்கத்துவத்தைக் கொண்டிருத்தல்

அத்துடன்

இ) நிருமாண வேலைகள், ஒப்பந்தங்களை கையாளுதல் மற்றும் ஊழியர் முகாமைத்துவம் போன்றவற்றில் குறைந்தது 10 வருட பொருத்தமான அனுபவத்தை கொண்டிருத்தல்.

சம்பள அளவுத் திட்டம் : U-EX 2(II) - Rs. 66,180 - 8x1,335; 8x1,630 – 89,900 p.m.

ஆட்சேர்ப்பு முறை : கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.

2. **<u>மருத்துவ அலுவலர்</u>**
<u>கல்வித் தகைமைகள்:</u>

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் மருத்துவப் பட்டப்படிப்பு அத்துடன் மருத்துவத்துறையில் மூன்று வருட அனுபவம்.

சம்பள அளவுத் திட்டம் : U-MO 1(II) - Rs. 55,350 – 10x1335; 1x1,630 – 70,330 p.m.

தெரிவு : கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.

3. **<u>பண்ணை முகாமையாளர், தரம் III</u>**

<u>கல்வித் தகைமைகள்</u>:-

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் விவசாய பட்டப்படிப்பு (4 வருடம்) அத்துடன் பட்டப் படிப்பின் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பயிர்ச் செய்கை, வேளாண்மை மற்றும் விலங்கியல் விஞ்ஞானம் போன்றவற்றில் இரண்டு வருட அனுபவம்.

சம்பள அளவுத் திட்டம் : U-EX 1(II) - Rs. 50,625 - 3x1,125 – 54,000(EB) 55,335; 12x1,335 – 71,355 p.m.

தெரிவு : கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் விண்ணப்பதாரி 40% புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தால் தெரிவு செய்யப்படுவதற்கு கவனத்தில் எடுக்கப்படும்.

## 4. மார்ஷல், தரம் II

கல்வித் தகைமைகள்:-

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் பெற்றுக் கொண்ட ஒரு பட்டம்

   வயதெல்லை :- 30 - 45 வயதுக்கு மேற்படாதிருத்தல்

   சரீர அளவு: உயரம் : 5'5"
   மார்பளவு : 32" (மூச்சு விட்ட நிலை)

   குறிப்பு : பொலிஸ்/ஆயுதம் தாங்கிய படைகளில் அனுபவம் மற்றும் பல்கலைக்கழக/ தேசிய ரீதியிலான விளையாட்டுகள் மற்றும் சமுக நலச்சேவைகளில் வினைத்திறனான பங்குபற்றல்

   அல்லது

2. இலங்கை ஆயுதம் தாங்கிய படைகளில் மேஜா் தரத்துக்கு குறையாத பதவியில் அனுபவம் பெற்றிருத்தல் அல்லது இலங்கை பொலிஸ் சேவையில் இத்தரத்துக்கு குறையாத பதவியில் அனுபவம்.

   சம்பள அளவுத் திட்டம் : U-MN 3 (II) - Rs. 42885 - 18x660 – 54,765 p.m.

   தெரிவு : கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை. விண்ணப்பதாரி 40% புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தால் தெரிவுக்காக கவனத்தில் எடுக்கப்படும்.

## 05. உப விடுதிக் காப்பாளர் தரம்- (II) (முழு நேரம்)

கல்வித் தகைமைகள்:-

அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் பெற்றுக் கொண்ட ஒரு பட்டம் நிருவாகம் மற்றும் விடுதி முகாமைத்துவம் என்பவற்றில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஆ) வயதெல்லை :- 45 வயதுக்கு மேற்படாதிருத்தல்

சம்பள அளவுத் திட்டம் : U-MN 3 (II) - Rs. 42885 - 18x660 – 54,765 p.m.

தெரிவு : கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.

**சேவை விதிகள்:-** முழுநேர உப விடுதி காப்பாளர்கள் நியமிக்கப்பட்டதிலிருந்து விடுதியில் தங்கியிருத்தல் வேண்டும். உயர் கல்வி நிறுவனத்தினால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு தொகை, தங்குமிடச் செலவுகளுக்காக அவர்களது சம்பளத்திலிருந்து அறவீடு செய்யப்படும்

## 06. மருந்தாளர் (குறைந்த தரம்):-

கல்வித் தகைமைகள்:-

அங்கீகரிக்கப்பட்ட இலங்கை மருத்துவப் பேரவையினால் வழங்கப்பட்ட தகுதிவாய்ந்த மருந்தாளருக்குரிய பொருத்தமான சான்றிதழ்.

சம்பள அளவுத் திட்டம் : U-MT 1(IIIA) - Rs. 31,625 – 7x300; 10x355 – 37,275 p.m.

தெரிவு : கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.

வயதெல்லை :- 45ற்கு மேற்படாதிருத்தல், இவ்வயதெல்லை அரசாங்க திணைக்களங்கள், நியதிச் சபைகள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களில் கடமைபுரியும் ஊழியர்களுக்கு பொருத்தமல்ல.

07. <u>பொது சுகாதார பரிசோதகர், தரம் - **III**</u>

கல்வித் தகைமைகள்:-

சுகாதார திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட பொதுச் சுகாதார பரிசோதகர் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் அத்துறையில் மூன்று வருட அனுபவம் பெற்றிருத்தல்

சம்பள அளவுத் திட்டம் : U-MT 1(IIIA) - Rs. 31,625 – 7x300; 10x355 – 37,275 p.m.

தெரிவு : கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.

வயதெல்லை : 45ற்கு மேற்படாதிருத்தல், இவ்வயதெல்லை அரசாங்க திணைக்களங்கள், நியதிச் சபைகள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களில் கடமைபுரியும் ஊழியர்களுக்கு பொருத்தமல்ல

பதிவாளர்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
பல்கலைக்கழக பூங்கா
ஒலுவில் - 32360
07.10.2020